1996 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சிக்கு வந்தவுடன் அண்ணாவும், நானும், மற்றவர்களும் திருச்சி சென்று தந்தை பெரியாரை நாடி ஆட்சியை அவருக்குக் காணிக்கையாக்கினோம். அந்த நினைவு இப்போது வீரமணிக்கு.

(இ) திரு. இரா. தாமரைக்கனி குடும்பத்தினர் அச்சுறுத்தப்பட்டது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ச. அழகிரி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. ச. அழகிரி (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி: நான் ஒரு பிரச்சினை குறித்து சொல்லியிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, திரு. இரா. தாமரைக்கனி.

முற்பகல் 11-35

* **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் கலந்துகொள்ள வந்திருக்கின்றேன். உங்களுடைய பாதுகாப்பிலேதான் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆமாம், துணைத் தலைவர் அவர்களுடைய பாதுகாப்பிலேதான் இருக்கிறேன். நான் சட்டமன்றத்திற்கு வந்த பிறகு, கடந்த 20 நாட்களாக, எங்களது கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சைதை துரைசாமி, கண்ணப்பன் போன்றவர்கள் அ.இ.அ.தி.மு.க. உடைப்புக்கு எங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென பல தடவை போனில் என்னை மிரட்டினார்கள். 19-ந் தேதியும் போனில் என்னை மிரட்டினார்கள். மேலும், அவர்கள், நாங்கள் உங்கள் ரூமுக்கு வருகிறோம், நீங்கள் எங்களுடன் கூட வர வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு, நான் முடியாது, நான் அ.இ.அ.தி.மு.க.-விலேதான் இருப்பேன். நான் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியினுடைய துணைத் தலைவர். நீக்கப்பட்டவர்களுக்குப் பின்னாலே நான் வர முடியாது என்று சொன்னேன். உடனே அவர்கள், நாளைக்கு வருகிறோம் என்று சொன்னார்கள். சரி வரட்டும், நாம் பார்த்துக் கொள்ளலாம், ரூமில்தான் இருப்போம், அவர்களா, நானா பார்த்துக் கொள்வோம் என்று இருந்தேன்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1996 ஆகஸ்ட் 21

ஆனால், நான் நேற்று பகல் ரூமில் இல்லை. சட்டமன்றத்திற்கு காலையே வந்துவிட்டேன். 2.45 மணி வரை இங்கேதான் இருந்தேன். 2.00 மணிக்கு நான் இல்லாத நேரத்திலே என் ரூமுக்கு வந்து, எனது மனைவியிடம் 'உங்களுடைய வீட்டுக்காரர் எங்கே, அவர் எங்களுடன் வந்து சேர வேண்டும்' என்று சொல்லி, பயங்கரமான ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு, இவ்வளவு நாட்களாக லட்சக்கணக்கில் காசு வாங்கிவிட்டோம் என்று சொல்லி மிரட்டிவிட்டு சென்று விட்டார்கள். அத்துமீறி கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்திருக்கிறார்கள். அதனால், அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், முதலமைச்சர் அவர்கள் சட்டம் ஒழுங்கைப் பார்த்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நான் போய் கமிஷனரிடம் பெட்டிஷன் கொடுக்கிறேன். அவர்களும் போய் பெட்டிஷன் கொடுக்கிறார்கள். இப்படித்தான் இருக்குமா? (மேசையைத் தட்டும் ஒலி) பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு நான் ஏதோ தகராறு பண்ணப்போவதாக அவர்கள் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். நானும் என்னுடைய மனைவியும்தான் வந்திருக்கிறோம். அவர்களைப் போல 10 குண்டர்களைக் கூட்டிக் கொண்டு வரவில்லை. நான் ஊரிலிருந்து யாரையும் கூட்டிக்கொண்டு வரவில்லை. நானும் என் மனைவியும்தான் வந்திருக்கிறோம். அடியாட்கள் 10 பேரை கூட்டிக்கொண்டு வந்தவர் பெட்டிஷன் கொடுத்து இருக்கிறார். எப்.ஐ.ஆர். போட்டிருப்பதாகப் போலீஸ் சொன்னார்கள். செக்ஷன் 506 பிரிவின்படி போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இதுவே, சாதாரண ஆள் யாராவது இருந்தால் உடனே அரெஸ்ட் பண்ணுவீர்கள். எனவே, கண்ணப்பனையும், சைதை துரைசாமியையும் அரெஸ்ட் பண்ணுங்கள். முதலமைச்சர் அவர்கள் தான் எனக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஒரு உறுப்பினருடைய உரிமைப் பிரச்சினைக்காக சொல்கிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த மாமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு உறுப்பினரின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தரவேண்டியது பேரவைத் தலைவருடைய கடமை. அந்த வகையில் நீங்கள் கூறியிருப்பது, கடந்த 20 நாட்களாகத் தொடர்கிறது என்று சொன்னீர்கள். ஆனால் எங்களிடம் நீங்கள் அறிவிப்புக் கொடுத்தது நேற்று மாலைதான். இருந்தாலும்கூட உங்கள் அறிவிப்புக் கிடைத்தவுடன்,

பேரவைச் செயலாளர் அவர்கள் மூலம் உரிய முறையிலே சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளருக்கு அனுப்பி, உங்களுக்கு வேண்டிய பாதுகாப்புத் தரச் சொல்லி வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். விசாரித்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும் (குறுக்கீடு). எனவே, இத்துடன் பிரச்சினையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20 நாட்களாக மிரட்டினார்கள் என்றால், போனில் பேசினார்கள். சரி, பழகின தோஷம் போகிறார்கள் என்று விட்டுவிட்டோம். ஆனால் அத்துமீறி உள்ளே நுழைந்த பிறகுதான், நான் உங்களுக்கும், கமிஷனருக்கும் பெட்டிஷன் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பழகின தோஷம் என்று சொன்னீர்கள். அந்தப் பழக்கத்தின் அடிப்படையிலேதான் அனுமதி இல்லாமல் வந்திருப்பார்கள். எது எப்படியோ, நீங்கள் கொடுத்ததை காவல் துறை ஆணையாளருக்கு அனுப்பி, அவர் நடவடிக்கை எடுக்கிறார். உங்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி: ஒரு உறுப்பினர் என்கிற உரிமையில்தான் பேசுகிறேன் ** உங்கள் கன்ட்ரோலில் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் நடந்து கொண்டு இருக்கிறது. ஒத்தைக்கு ஒத்தையாக வந்தார்களேயானால் சமாளித்துவிடுவேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் மாவீரன் என்பது இந்த அவையே அறிந்ததுதான். இதோடு முடித்துக் கொள்ளுங்கள் (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொன்னேன். உங்களை அனுமதிக்கிறேன், சுருக்கமாகச் சொல்லுங்கள் என்று சொன்னேன். நீங்கள் விரிவாகப் பேசினீர்கள். இருந்தாலும்கூட பேரவைத் தலைவர் என்ற முறையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதை எடுத்தாகிவிட்டது. தேவையில்லாதவற்றை அவைக்குறிப்பில் பதிய வைக்க நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். அதை அனுமதிக்க மாட்டேன். அவைக் குறிப்பிலிருந்து அந்தச் சொற்றொடர்கள் நீக்கப்படுகின்றன. அதனைப் பத்திரிகைகளிலே வெளியிடக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS